Q.C. 144

**DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)**

| **Name of the Test:** | Social Welfare Departmental Examination Paper–IV-Social Legislations (Part - II) (With Books) | 176 |
|---|---|---|

Maximum Time: 2.30 Hour Maximum Marks: 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## **OBJECTIVE TYPE**

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

1. Right to information act, extends to whole of India except, _________.
தகவல் பெறும் உரிமைச் சட்டம் ___________ மாநிலம் நீங்கலாக இந்தியா முழுவதும் அளாவி நிற்கும்.

(A) Madhya Pradesh
மத்திய பிரதேசம்

(B) Maharashtra
மகாராஷ்டிரா

(C) Jammu and Kashmir
ஜம்மு-காஷ்மீர்

(D) Uttar Pradesh
உத்திர பிரதேசம்

2. The Competent Authority - Administrator appointed under _________ of the constitution.
தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு என்பது அரசமைப்பின் ___________ படி நியமிக்கப்பட்டது.

(A) Article 239
உறுப்பு 239

(B) Article 237
உறுப்பு 237

(C) Article 235
உறுப்பு 235

(D) Article 233
உறுப்பு 233

3. Person other than the citizen making and request for information known as
தகவலுக்கா வேண்டுகோள் ஒன்றை செய்யும் குடிமகன் அல்லாத ஆள் ஒருவர் எவ்வாறு பொருள்படுவார்?

(A) Third Party
மூன்றாம் தரப்பினர்

(B) Second Party
இரண்டாம் தரப்பினர்

(C) Applicant
விண்ணப்பதாரர்

(D) Offender
குற்றவாளி

4. According to Section 12, the Chief Information Commissioner should be appointed by the
பிரிவு 12-ன் படி தலைமைத் தகவல் ஆணையர் யாரால் நியமிக்கப்படுவார்?

(A) President
குடியரசு தலைவர்

(B) Prime Minister
பிரதமர்

(C) Union Cabinet Minister
அமைச்சரவையின் அமைச்சர்

(D) Leader of opposition in Loksabha
மக்கள் அவையின் எதிர் கட்சி தலைவர்

5. The headquarters of the Central Information Commission is at ________.
மையத் தகவல் ஆணையத்தின் அமைப்பு எங்கு உள்ளது?

(A) Gujarat
குஜராத்

(B) Delhi
டெல்லி

(C) Mumbai
மும்பை

(D) Chennai
சென்னை

6. The State Chief Information Commissioner shall hold office till he attains the age of
முதன்மை தகவல் ஆணையர் ________ வயது அடைந்த பின்னர் பதவி வகித்தல் கூடாது.

(A) 65 year
65 ஆண்டுகள்

(B) 58 years
58 ஆண்டுகள்

(C) 60 years
60 ஆண்டுகள்

(D) 62 years
62 ஆண்டுகள்

7. If the Public Information Officers fails to furnish the information which was the subject of request in any manner it shall impose a penalty of ________ each day.
பொது தகவல் அலுவலர் வேண்டப்பட்ட தகவலை குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் அளிக்காமல் இருப்பதாயின் நாறொன்றுக்கு ________ தண்டம் விதித்தல் வேண்டும்.

(A) 100 Rupees
100 ரூபாய்

(B) 250 Rupees
250 ரூபாய்

(C) 200 Rupees
200 ரூபாய்

(D) 20 Rupees
20 ரூபாய்

8. The total amount of penalty for public information officer in case of misleading information or destroying information which was the subject of request, shall not exceed
வேண்டப்பட்ட தகவலுக்கு பொதுத் தகவல் அலுவலர் தவறான எண்ணத்தை தோற்றுவிக்கும் தகவலை தெரிந்தே கொடுத்திருப்பாராயின் அல்லது அழித்திருப்பராயின் அத்தகைய தண்டத்தின் மொத்தத் தொகையானது எத்தொகைக்கு மேற்படலாகாது?

(A) 1000 Rupees
1000 ரூபாய்

(B) 25000 Rupees
25000 ரூபாய்

(C) 20000 Rupees
20000 ரூபாய்

(D) 50000 Rupees
50000 ரூபாய்

9. Power to make rules by appropriate Government discussed in Section ________.
உரிய அரசாங்கத்தினால் விதிகள் செய்யப்படுவதற்கான அதிகாரம் எந்தப் பிரிவு வலியுறுத்துகின்றது ?

(A) 27 (B) 25
(C) 29 (D) 30

10. The information fought for concerns the life or liberty of a person can be provided within _________ of the receipt of the request.
நாட்பட்ட தகவலானது ஒருவருடைய உயிர் அல்லது சுதந்திரம் தொடர்புடையதாக இருக்கிறவிடத்து அதற்கான கோரிக்கையை பெறப்பட்ட ___________ மணி நேரத்திற்குள் அந்த தகவல் அளிக்கப்படுதல் வேண்டும்.

(A) 24 hours
24 மணி நேரம)
(B) 12 hours
12 மணி நேரம்
(C) 48 hours
48 மணி நேரம்
(D) 36 hours
36 மணி நேரம்

11. According to Section 19 (1) when the State Public Information Officer is satisfied that the appellant was prevented by sufficient case from filing the appeal in time, the officer may admit the appeal even after the expiry of _________.
பிரிவு 19(1)-ன் படி மாநில பொதுத் தகவல் அலுவலர் மேற்முறையீட்டாக மேல்முறையீட்டை தாகல் செய்வதிலிருந்து போதிய காரணத்தால் தடுக்கப்பட்டிருந்தார் என்று தெளிவுறக் காண்பாராயின், ____________ காலம் களிவுற்ற பின்பும் மேல்முறையீட்டினை ஏற்றுக்கொள்ளலாம்.

(A) 90 days
90 நாட்கள்
(B) 30 days
30 நாட்கள்
(C) 48 hours
48 மணி நேரம்
(D) 60 days
60 நாட்கள்

12. Removal of State Chief Information Commissioner or State Information Commissioner dealt in Section _________.
மாநிலத் தலைமைத் தகவல் ஆணையரை அல்லது மாநிலத் தகவல் ஆணையரை நீக்குதல் பற்றி எடுத்துரைக்கும் பிரிவு

(A) 12 (B) 15
(C) 16 (D) 17

13. Under Section ________ the person making request for the information shall be provided the information free of charge where a public authority fails to comply with the time limits.
பிரிவு __________ -ன் படி ஒரு பொதுத்தகவல் அலுவலர் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் மனுதாரருக்கு அளிக்கவில்லை எனில் அவருக்கு தகவலை இலவசமாக தரவேண்டும்.

(A) 7(4)
(B) 7(6)
(C) 7(7)
(D) 7(8)

14. Disclosure of information explained in Section _________.
தகவலினை வெளியிடுவதிலிருந்து விலக்களிப்பு எந்தப் பிரிவு எடுத்துரைக்கின்றது?

(A) 10
(B) 11
(C) 9
(D) 8

15. According to Section 26 (2) the appropriate Government shall, within _______ months from the commencement of this Act, compile relevant training materials and activities in its official language a guide containing such information, as it may required by a person who wishes to exercise any right specified in this Act.
பிரிவு 26(2)-ன் படி உரிய அரசாங்கமானது சட்டத்தின் தொடக்க நிலையிலிருந்து __________ மாதங்களுக்குள் பயிற்சி சாதனங்கள் மற்றும் செயல்முறை திட்டங்கள் அடங்கிய வழிகாட்டி ஒன்றைச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட உரிமை எதையும் செயல்படுத்த விரும்பும் நபர் ஒருவரால் வேண்டுறுத்தப்படக் கூடியவாறு தனது அலுவல் மொழியில் தொகுத்தல் வேண்டும்.

(A) 18
(B) 16
(C) 12
(D) 6

16. The Central Information Commission shall consist of the Chief Information Commissioner and such number of Central Informations not exceeding ________ as may be deemed necessary.
மையத் தகவல் ஆணையமானது தலைமை தகவல் ஆணையர் மற்றும் அவசியமெனக் கருதப்படும் __________ கும் மேற்படாததுமான எண்ணிக்கையிலான தகவல் ஆணையர்களையும் உள்ளடக்கி இருத்தல் வேண்டும்.

(A) 5
(B) 8
(C) 10
(D) 12

17. Which Section insist that an applicant making request for information shall not be required to give any reason for requesting the information or any other personal details except those that may be necessary for contraction him.
எந்தப் பிரிவு தகவலுக்காக வேண்டுகோள் செய்யும் விண்ணப்பதாரர் ஒருவர் தகவலின் வேண்டுகைக்கான காரணங்கள் பற்றியும் அல்லது அவரை தொடர்பு கொள்வதற்கு அவசியமான விபரங்களைத் தவிர வேறு சொந்த விபரங்கள் எதையும் அளிக்குமாறு வற்புறுத்தக் கூடாது என்பதை வலியுறுத்துகின்றது.

(A) 6(2)
(B) 6(3)
(C) 6(1)
(D) 6

18. RTI enacted by parliament in the ________ of the Republic of India.
இந்திய குடியரசின் ____________ ல் நாடாளுமன்றத்தால் தகவல் அறியும் உரிமைச் சட்டம் இயற்றப்பட்டது.

(A) $56^{th}$ year
56வது ஆண்டு
(B) $57^{th}$ year
57வது ஆண்டு
(C) $55^{th}$ year
55வது ஆண்டு
(D) $50^{th}$ year
50வது ஆண்டு

19. The transfer of an application pursuant to the Section 6 (3) shall be made as soon as practicable but in no case later than ________ days from the date of receipt of the application.
6-ன் உட்பிரிவு(3) க்கு தொடர்ந்த விண்ணப்பம் ஒன்றில் மாற்றல் நடைமுறை இயன்றவரை விரைவாக செய்யப்பட்டாலும் எந்நேர்விலும் விண்ணப்பம் பெற்ற தேதியிலிருந்து ____________ நாட்களுக்கு மேல் கூடாது.

(A) 5
(B) 15
(C) 30
(D) 10

20. Appeal under RTI Act, 2005 subjects to Section ________.
தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005-ன் எந்தப் பிரிவு மேல்முறையீடு பற்றி எடுத்துரைக்கின்றது ?

(A) 19
(B) 18
(C) 20
(D) 21

21. Committee means child welfare committee constituted under Section ________.
சிறுவர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தில் குழு என்பது பிரிவு ________ இன் கீழ் குழந்தை நல கமிட்டியால் ஏற்படுத்தப்பட்ட கமிட்டி என்று பொருள்படும்.

(A) 25
(B) 27
(C) 24
(D) 23

22. Child line services means ________ emergency outreach service for children in crisis.
குழந்தைகள் சேவை மையம் என்பது குழந்தைகளின் பிரச்சனை சம்பந்தமாக அல்லது குழந்தைகள் நீண்டகால பராமரிப்பு மற்றும் மறுவாழ்வு சம்மந்தமாக ________ செயற்படும் ஒரு அவசரநிலை அமைப்பு என்று பொருள்படும்.

(A) 10 hours
10 மணிநேரம்
(B) 12 hours
12 மணிநேரம்
(C) 24 hours
24 மணிநேரம்
(D) 22 hours
22 மணிநேரம்

23. Foster family means a family found suitable by the District Child Protection Unit to keep children in foster case under Section ________.
வளர்ப்பு இல்லம் என்பது பிரிவு ________ இன் கீழ் குழந்தைகள் கண்காணிப்புக்கு ஏற்படுத்தப்பட்ட மாவட்ட குழந்தை பாதுகாப்பு மையத்தால் தகுதிவாய்ந்ததென்று கண்டறியப்பட்ட ஒரு குடும்பம் என்று பொருள்படும்.

(A) 30
(B) 40
(C) 44
(D) 34

24.

| | | | |
|---|---|---|---|
| (a) | Probation of Offenders Act<br>குற்றவாளிகளின் நன்னடத்தை கண்காணிப்புச் சட்டம் | 1. | 1956<br>1956 |
| (b) | Immoral Traffic Prevention Act<br>விபச்சார தடுப்புச் சட்டம் | 2. | 1958<br>1958 |
| (c) | Narcotic Drugs and Psychotrophic Substances Act<br>போதை மருந்துகள் மற்றும் போதைப் பொருள்கள் சட்டம் | 3. | 2012<br>2012 |
| (d) | Protection of Children from Sexual Offences Act<br>குழந்தைகளைப் பாலியர் குற்றங்களிலிருந்து பாதுகாக்கும் சட்டம் | 4. | 2005<br>2005 |
| (e) | Protection of Child Rights Act<br>குழந்தை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் | 5. | 1985<br>1985 |

| | (a) | (b) | (c) | (d) | (e) |
|---|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 5 | 3 | 4 |
| (B) | 1 | 2 | 4 | 3 | 5 |
| (C) | 4 | 5 | 3 | 2 | 1 |
| (D) | 2 | 4 | 1 | 3 | 5 |

25. Preliminary Assessment in case of heinous offences under Section 15 shall be disposed of by the Board within a period of ________ from the date of first production of the child before the Board.

பிரிவு 15-இன் கீழான கொடுங்குற்றங்கள் சம்பந்தமான தொடக்கநிலை மதிப்பீட்டை குழந்தை குழுவின் முன் முதன்முதலில் ஒப்படைக்கப்பட்ட தேதியிலிருந்து ____________ காலத்திற்குள் குழுவால் முடிவு செய்யப்படுதல் வேண்டும்.

(A) 3 months
3 மாதங்கள்

(B) 6 months
6 மாதங்கள்

(C) 1 month
1 மாதம்

(D) 2 months
2 மாதங்கள்

26. Social investigation report likely to be of assistance to the Board for making the enquiry can be prepared and submitted by child welfare officer within a period of
குழு விசாரணை செய்வதற்கு உதவிகரமாக அமையும் வகையில் சமூக புலனாய்வு அறிக்கையை குழந்தை நல அலுவலர் தயார் செய்து __________ காலத்திற்குள் குழுவிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(A) 6 weeks
6 வாரம்

(B) 2 weeks
2 வாரம்

(C) 3 weeks
3 வாரம்

(D) 4 weeks
4 வாரம்

27. The Chief Judicial Magistrate or the Chief Metropolitan Magistrate shall review the pendency of cases of the Board once in every ________.
குழந்தை நலக் குழுவில் நிலுவையில் இருக்கும் வழக்குகளை __________ ஒருமுறை தலைமை நீதித்துறை நடுவர் அல்லது தலைமை பெருநகர நடுவர் மறுஆய்வு செய்தல் வேண்டும்.

(A) Week
வாரத்திற்குள்

(B) Month
மாத்திற்குள்

(C) 3 months
3 மாதங்கள்

(D) Fortnight
15 நாட்களுக்குள்

28. The child can be directed to be released and placed under supervision of any fit facility for ensuring good behavior for any period not exceeding
குழந்தையை நன்னடத்தையின் பேரில் விடுதலை செய்வதாயின் அந்தக் குழந்தையை அதிகமாகாமல் நல்ல நடவடிக்கைக்கும் நல்ல முறையில் பராமரிக்கவும் உறுதி செய்கின்றவரிடம் ஒப்படைக்க உத்தரவிடலாம்.

(A) 6 months
6 மாதங்கள்

(B) 1 year
1 வருடம்

(C) 2 years
2 ஆண்டுகள்

(D) 3 years
3 ஆண்டுகள்

29. The children's court shall ensure that the child who is found to be in conflict with law is sent to a place of safety till he attain the age of ________ years.
குழந்தை ஒன்று சட்டத்துடன் முரண்பட்டதாக கண்டறியப்பட்டிருக்கும் போது அந்தக் குழந்தைக்கு __________ வயது ஆகின்ற வரையில் அதனைப் பாதுகாப்பான ஒரு இடத்திற்கு அனுப்பி வைப்பதாக குழந்தைகள் நீதிமன்றம் உறுதி செய்தல் வேண்டும்.

(A) 18

(B) 16

(C) 25

(D) 21

30. No person shall be appointed for a period of more than ________ years as a member of the child welfare committee.
குழந்தை நல குழுவின் உறுப்பினராக நியமிக்கப்படும் நபரை ________ காலத்திற்கேற்ப நியமித்தல் கூடாது.

(A) 5 years
5 ஆண்டுகள்

(B) 1 year
1 ஆண்டு

(C) 3 years
3 ஆண்டுகள்

(D) 2 years
2 ஆண்டுகள்

31. The Child Welfare Committee shall meet atleast ________ days in a month and observe rules and procedures with respect to transaction.
கூட்டங்களின் நடவடிக்கைகள் சம்பந்தமாக குறித்துரைக்கப்பட்ட நடைமுறைகளை பின்பற்றுதலுக்காக குழந்தை நலக் குழு மாதத்தில் குறைந்தபட்சம் ________ நாளாவது கூடுதல் வேண்டும்.

(A) 20

(B) 21

(C) 15

(D) 75

32. The District Magistrate shall conduct a ________ review of the functioning of the child welfare of a committee.
குழந்தை நல கமிட்டியின் செயற்பாடுகளை ________ மாவட்ட நடுவர் மறுஆய்வு செய்தல் வேண்டும்.

(A) Monthly
மாதத்திற்கு ஒரு முறை

(B) Fortnight
15 நாட்களுக்கு ஒரு முறை

(C) Quarterly
காலாண்டுக்கு ஒரு முறை

(D) Yearly
ஆண்டிற்கு ஒரு முறை

33. The appointment of any member of the committee shall be terminated by State Government after making an inquiry if he fails to attend less than ________ of the sittings in a year.
குழந்தை நல குழுவுக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் கமிட்டியின் நடைமுறைகளில் ஓர் ஆண்டுக்கான அமர்வுகளில் ________ பங்குக்கு குறைவான அமிர்வுகளில் கலந்து கொள்வதற்கு தவறினால் அது தொடர்பாக விசாரணை மேற்கொண்ட பிறகு அவரை மாநில அரசாங்கம் பதவி நீக்கம் செய்தல் வேண்டும்.

(A) 1/4th
நான்கில் ஒன்று

(B) 3/4th
நான்கில் மூன்று

(C) 4
நான்கு

(D) 1/2 th
இரண்டில் ஒன்று

34. Penalty for non registration of child care institution may extend to ________ or a fine of not less than 1 lakh rupees or both.
குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் பதிவு செய்யப்படாததற்கு தண்டனையாக ____________ வரையில் நீடிக்கக் கூடிய சிறை தண்டனை அல்லது ஒரு இலட்சம் ரூபாய்க்குக் குறையாத அபராதம் அல்லது அவை இரண்டும் விதித்து தண்டிக்கப்படுவார்.

(A) 1 year
1 வருடம்

(B) 6 months
6 மாதங்கள்

(C) 5 years
5 வருடங்கள்

(D) 2 years
2 வருடங்கள்

35. According to Section ________ a single male is not eligible to adopt a girl child.
பிரிவு ____________ இன் படி ஒரு தனி ஆண் ஒரு பெண் குழந்தையை தத்தெடுக்க தகுதியுடையவர் ஆக மாட்டார்.

(A) 54 (3)

(B) 58 (3)

(C) 57 (4)

(D) 56 (5)

36. Using a child for vending, peddling, carrying, supplying, smuggling, any intoxicating liquor, narcotic drug or psychotropic substance shall also be liable to a fine upto ________.
குழந்தையை மது, போதை மருந்து, போதைப் பொருள், விற்பனை செய்வதற்கு, சுற்றித்திரிந்து விற்பனை செய்வதற்கு, சுமந்து செல்வதற்கு, விநியோகிப்பதற்கு அல்லது கடத்தலுக்கு பயன்படுத்துகிறவருக்கு ____________ வரையில் அபராதமாக விதித்து தண்டிக்கப்படுவார்.

(A) 2 lakhs rupees
2 இலட்சம் ரூபாய்

(B) 5 lakhs rupees
5 இலட்சம் ரூபாய்

(C) 1 lakh rupees
1 இலட்சம் ரூபாய்

(D) 50,000 rupees
50,000 ரூபாய்

37. Once the transfer is finalized, the Committee or Board shall give an escott order to special juvenile police unit within ________ of receiving substance.
குழந்தையை மாற்றி வைப்பதற்கான இறுதி முடிவு ஒரு முறை எடுத்த பிறகு அந்த உத்தரவு கிடைக்கப் பெற்றதிலிருந்து ____________ நாட்களுக்குள் குழந்தை நல கமிட்டி குழந்தையின் வழிப்பாதுகாப்புக்காக வழிக்காவலரை அனுப்பி வைத்திட உத்தரவிட வேண்டும்.

(A) 30 days
30 நாட்கள்

(B) 15 days
15 நாட்கள்

(C) 60 days
60 நாட்கள்

(D) 21 days
21 நாட்கள்

38. Age determination test can be conducted on the order of Committee or Board shall be completed within ________ from the date of such order.
குழந்தை நலக்குழுவின் உத்தரவின் பேரில் வயதை முடிவு செய்வதற்கு மேற்கொள்ளப்படும் சோதனை அத்தகைய உத்தரவு பிறப்பிக்கப்பட தேதியிலிருந்து ________ நாட்களுக்குள் முடித்தல் வேண்டும்.

(A) 20 days
20 நாட்கள்

(B) 21 days
21 நாட்கள்

(C) 15 days
15 நாட்கள்

(D) 30 days
30 நாட்கள்

39. Procedure for declaring a child legally free for adoption subjects to Section ________.
குழந்தை தத்தெடுக்கப்படுவதற்கு சட்டப்படி சுதந்திரமாக இருக்கிறது என்பதை விளம்புகை செய்வதற்கான நடைமுறை எந்த பிரிவில் விளக்கப்பட்டுள்ளது?

(A) 46

(B) 38

(C) 28

(D) 32

40. Declaring a child who age upto two years of age shall be made within a period of ________ from the date of prediction of child.
குழந்தை இரண்டு வயது வரையில் இருக்கும் நிலையில் அந்தக் குழந்தையை கமிட்டியிடம் ஒப்படைத்த தேதியிலிருந்து ________ காலத்திற்குள் தத்தெடுக்கப்படுவதற்கான விளம்புகையைச் செய்தல் வேண்டும்.

(A) 4 months
4 மாதங்கள்

(B) 6 months
6 மாதங்கள்

(C) 3 months
3 மாதங்கள்

(D) 2 months
2 மாதங்கள்

41. Legislative Assembly enacted the Tamil Nadu, Hostel and Homes for Women and Children (Regulation) Act ________.
தமிழ்நாடு மாநில சட்டமன்ற பேரவையினால் தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைபடுத்தும்) சட்டம் ________ இயற்றப்பட்டது.

(A) 2016

(B) 2018

(C) 2014

(D) 2000

42. Child means a boy or girl who has not completed at the age of ________.
குழந்தை என்பது __________ வயது நிறைவடையாத சிறுவன் அல்லது சிறுமி என்று பொருள்படும்.

(A) 18
(B) 21
(C) 16
(D) 13

43. Building in which accommodation is provided for women or children or both, either with boarding or not meant as ________.
மகளிர் அல்லது குழந்தைகளுக்கான அல்லது இருவருக்கும் உணவுடனோ அல்லது உணவு இல்லாமல் தங்கும் வசதி செய்யப்பட்டுள்ள கட்டடம் __________ என்று பொருள்படும்.

(A) Hotels
உண்டி சாலை
(B) Homes
வீடுகள்
(C) Loding house
தங்கும் விடுதி
(D) Orphanage
ஆதரவற்றோர் இல்லம்

44. Women means a female who has completed the age of ________.
பெண் என்பது __________ வயது நிறைவடைந்த பெண் என்று பொருள்படும்.

(A) 25 years
25 வருடங்கள்
(B) 21 years
21 வருடங்கள்
(C) 18 years
18 வருடங்கள்
(D) 16 years
16 வருடங்கள்

45. When Collector refuses to grant license under subsection ________, he shall give reasons in writing for such refusal.
__________ ஆம் உட்பிரிவின்படி ஆட்சியர் உரிமம் வழங்க மறுக்கிறவிடத்து அத்தகைய மறுப்பிற்கான காரணங்களை எழுத்து வடிவில் அளிக்க வேண்டும்.

(A) 4
(B) 3
(C) 1
(D) 2

46. Every person entitles to continue hostel under subsection (1), shall not continue hostel after the expiry of a period of ________ from the date of commencement of Tamilnadu hostels and Homes for Women and Children (Regulation) Act, unless he obtains the license under Section 5.
1 ஆம் உட்பிரிவின்படி மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியை தொடர்ந்து நடத்துவதற்கு உரிமையுடைய நபர் ஒவ்வொருவரும் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான அத்தகைய விடுதி தொடர்பாக 5 ஆம் பிரிவின்படியான அதன் உரிமத்தை அவர் பெற்றிருந்தாலன்றி மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் சட்டத்தின் தொடக்க தேதியிலிருந்து ____________ கால அளவு முடிவுற்ற பின்பு விடுதியை தொடர்ந்து நடத்துதல் கூடாது.

(A) 6 months
6 மாதங்கள்

(B) 3 months
3 மாதங்கள்

(C) 2 months
2 மாதங்கள்

(D) 1 month
1 மாதம்

47. Every application for a license to run hostel under the subsection (2) shall be accompanied by fee not exceeding __________.
விடுதியின் உரிமத்திற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் வகுத்துரைக்கலாகும் ____________ க்கு மேற்படாத கட்டணத்துடன் சேர்த்து இருத்தல் வேண்டும்.

(A) 1,000 rupees
1,000 ரூபாய்

(B) 5,000 rupees
5,000 ரூபாய்

(C) 2,000 rupees
2,000 ரூபாய்

(D) 3,000 rupees
3,000 ரூபாய்

48. Every application for renewal of license shall be made not less than _______ before the date of expiry of period of such license.
விடுதியின் உரிமத்தினை புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் அத்தகைய உரிமத்தின் கால அளவு முடிவுற்ற தேதிக்கு முன்பு ____________ க்கு குறையாமல் செய்யப்படுதல் வேண்டும்.

(A) 6 months
6 மாதங்கள்

(B) 3 months
3 மாதங்கள்

(C) 9 months
9 மாதங்கள்

(D) 2 months
2 மாதங்கள்

49. ________ has the power to cancel or suspend license of hostel, if it appears that such license obtained by misrepresentation.
பிரிவு-9 ன் படி விடுதியின் உரிமம் பொய்யான விவரத்தை அளிக்கப்பட்டு பெறப்பட்டிருக்கிறது என்று தோன்றுமேயானால் உரிமத்தை ரத்து செய்வதற்கு அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு யாருக்கு அதிகாரம் உண்டு?

(A) Collector
ஆட்சியர்

(B) Appellate Authority
மேல் முறையீட்டு அதிகாரம்

(C) Legislative Assembly
சட்டப்பேரவை

(D) Governor
ஆளுநர்

50. Tamil Nadu Hostels and Homes for Woman and Children (Regulation) Act, Section 11 deals with ________.
மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் சட்டம், பிரிவு 11 எதனைக் கையாள்கிறது?

(A) Appeal
மேல்முறையீடு

(B) Surrender of license
உரிமத்தை ஒப்படைத்தல்

(C) Renewal
புதுப்பித்தல்

(D) Disposal
அகற்றப்படல்

51. The Collector on being satisfied with provision of Act and the rules as regard registration, shall issue a
ஆட்சியர் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகம் பதிவு செய்தல் நடைமுறையில் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் சட்டத்தின்படி (2014) செய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகளுக்கு காப்பகம் இணங்கி உள்ளது என்று மனநிறைவடைவதன் பேரில் ____________ வழங்குதல் வேண்டும்.

(A) Certificate of license
உரிமத்திற்கான சான்றிதழ்

(B) Certificate of registration
பதிவு செய்தலுக்கான சான்றிதழ்

(C) Certificate of maintenance
பராமரிப்பிற்கான சான்றிதழ்

(D) Certificate of structural stability
கட்டமைப்பு நிலைத்தன்மைக்கான சான்றிதழ்

52. For every women and children hostels and homes under Section _________ inmates there shall be one manager or resident manager.
மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் சட்டத்தின்படி தங்கியிருக்கும் ஒவ்வொரு ___________ நபர்களுக்காகவும் ஒரு மேலாளர் அல்லது ஒள்ளுறையும் மேலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும்.

(A) 30
(B) 25
(C) 50
(D) 20

53. Under section 14 the manager shall comply with every direction of _______ in respect of cleansing and disinfection.
பிரிவு 14-இன் படி மேலாளர் அல்லது உள்ளுறையும் மேலாளர் யாருடைய பணிப்புரை ஒவ்வொன்றிற்கும் இணங்கி நடத்தல் வேண்டும்?

(A) Collector
ஆட்சியர்
(B) Supervisor
மேற்பார்வையாளர்
(C) Medical Officer
மருத்துவ அலுவலர்
(D) Health Inspector
சுகாதார ஆய்வாளர்

54. Security personnel shall be appointed for the women and children hostel but not above the age of _______.
மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியில் பணியமர்த்தம் செய்யப்படும் பாதுகாப்பு பணியாளர்களின் வயது ___________ க்கு மேற்பட்டு இருத்தலாகாது.

(A) 64 years
64 வருடங்கள்
(B) 58 years
58 வருடங்கள்
(C) 55 years
55 வருடங்கள்
(D) 60 years
60 வருடங்கள்

55. Any person who fails to obtain a license under Section 5 or 6 shall be punishable with imprisonment which may extend upto _________.
5-ஆம் அல்லது 6-ஆம் பிரிவின்படி உரிமத்தை பெறுவதற்கு தவறுகின்ற நபர் எவரும் ___________ வரை நீட்டிக்கலாகும் சிறைத்தண்டனையனால் தண்டிக்கப்படத்தக்கவராவார்.

(A) 2 years
2 வருடங்கள்
(B) 1 year
1 வருடம்
(C) 6 months
6 மாதங்கள்
(D) 5 years
5 வருடங்கள்

56. When a home for women and children registerable under sub sections (1) or (2) of section 12 fails to get itself registered within the period specified for registration shall be punishable with
மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகம் 12 ஆம் பிரிவின் (1)-ஆம் உட்பிரிவு அல்லது (2)-ஆம் உட்பிரிவின்படி பதிவு செய்யப்படக்கூடியதாக இருக்கிறவிடத்து குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் அது பதிவு செய்யத் தவறுகிறதென்றால் அத்தகைய காப்பகங்களின் உள்ளுறையும் மேலாளருக்கு அக்குற்றத்திற்கான தண்டனை என்ன?

(A) Imprisonment extend to 2 years + fine extend to 50,000 rupees
2 ஆண்டுகள் வரை நீட்டிக்கலாகும் சிறைத்தண்டனை மற்றும் 50,000 ரூபாய் வரை நீட்டிக்கலாகும் பணத்தண்டம்

(B) Imprisonment extend to 5 years + fine extend to 1 lakh rupees
5 ஆண்டுகள் வரை நீட்டிக்கலாகும் சிறைத்தண்டனை மற்றும் 1,00,000 ரூபாய் வரை நீட்டிக்கலாகும் பணத்தண்டம்

(C) Imprisonment extend to 3 years + fine extend to 50,000 rupees
3 ஆண்டுகள் வரை நீட்டிக்கலாகும் சிறைத்தண்டனை மற்றும் 50,000 ரூபாய் வரை நீட்டிக்கலாகும் பணத்தண்டம்

(D) Imprisonment not less than 3 years + fine extend to 50,000 rupees
3 ஆண்டுகள் குறையாத சிறைத்தண்டனை மற்றும் 50,000 ரூபாய் வரை நீட்டிக்கலாகும் பணத்தண்டம்

57. Any person who fails to comply with any of the provisions of act other than Sections 5, 6, 12 shall be punishable in the case of second or subsequent offence with _______.
சட்டத்தின் 5, 6 மற்றும் 12 ஆகிய பிரிவுகளின் வகைமுறைகள் அல்லாத பிறவகை முறைகள் எவற்றிற்கும் இணங்கியிருக்கத் தவறுகிற நபர் எவரும் இரண்டாவது அல்லது அதற்கு அடுத்தபடியான குற்றமாக இருக்கின்ற நேரில் அவருக்குரிய தண்டனை என்ன?

(A) Imprisonment of not less than 3 years may extend to 5 years + fine of 1 lakh rupees
3 ஆண்டுகளுக்கு குறையாத 5 ஆண்டுகள் வரை நீட்டிக்கலாகும் சிறைத்தண்டனை மற்றும் ஒரு இலட்சம் ரூபாய் வரை பணத்தண்டம்

(B) Imprisonment of not less than 2 years may extend to 3 years + fine of 50,000 rupees
2 ஆண்டுகளுக்கு குறையாத 3 ஆண்டுகள் வரை நீட்டிக்கலாகும் சிறைத்தண்டனை மற்றும் ஐம்பதாயிரம் ரூபாய் வரை பணத்தண்டம்

(C) Imprisonment of not less than 2 years may extend to 5 years + fine of 1 lakh rupees
2 ஆண்டுகளுக்கு குறையாத 5 ஆண்டுகள் வரை நீட்டிக்கலாகும் சிறைத்தண்டனை மற்றும் ஒரு இலட்சம் ரூபாய் வரை பணத்தண்டம்

(D) Imprisonment of not less than 6 months may extend to 2 years + fine of 50,000 rupees
6 மாதங்களுக்கு குறையாத 2 ஆண்டுகள் வரை நீட்டிக்கலாகும் சிறைத்தண்டனை மற்றும் ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் பணத்தண்டம்

58. ________ means any body corporate, includes a firm or other association individuals.
ஒரு நிறுவாகத்தை அல்லது பிற தனிநபர்களின் பிற கழகத்தையும் உள்ளடக்கும் கூட்டுரும அமைப்பு எதுவும் எவ்வாறு பொருள்படும்?

(A) Partner
கூட்டுப் பங்காண்மை

(B) Trust
அறக்கட்டளை

(C) Director
இயக்குநரகம்

(D) Company
நிறுமம்

59. Power to inspect the women and children hostel subjects to section ________.
மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியினை ஆய்வு செய்வதற்கான அதிகாரம் பற்றி எந்தப் பிரிவில் வகைப்படுத்தப்பட்டுள்ளது?

(A) 25

(B) 26

(C) 27

(D) 22

60. Power to make rules subjects to section ________.
விதிகளைச் செய்வதற்கான அதிகாரம் எந்த பிரிவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது?

(A) 26

(B) 23

(C) 25

(D) 20

61. The District Tender Bulletin shall be published by the District Bulleting Officer atleast once in a
மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரை மாவட்ட செய்தி மலரை வெளியிடும் அதிகாரி குறைந்தது ____________ ஒருமுறையாவது வெளியிட வேண்டும்.

(A) Month
மாதம்

(B) Fortnight
15 நாளுக்கு

(C) Week
வாரம்

(D) Year
வருடம்

62. The tender inviting authority shall have the notice inviting tenders published in the Indian Trade Journal, where the value of procurement exceeds ________.
கொள்முதல் மதிப்பு __________ ரூபாய்களுக்கு மேற்பட்ட அனைத்து நேர்வுகளிலும் ஒப்பந்தப்புள்ளிக்கான அறிவிப்பை ஒப்பந்தப்புள்ளி அதிகார அமைப்பு இந்திய வர்த்தக இதழில் வெளியிடுமாறு செய்தல் வேண்டும்.

(A) 50 crores
50 கோடி

(B) 10 crores
10 கோடி

(C) 15 crores
15 கோடி

(D) 5 crores
5 கோடி

63. The initial period of validity of tender document for which the tender should hold prices shall not less than
ஒப்பந்தப்புள்ளியில் விருப்ப அறிவிப்பு செய்யப்பட்ட விலை குறிப்பீடுகளை ஒப்பந்த புள்ளிக்காரர் தொடக்க செயல்திறன் காலத்தில் சாதாரணமாக __________ நாட்களாக வைத்திருத்தல் வேண்டும்.

(A) 60 days
60 நாட்கள்

(B) 90 days
90 நாட்கள்

(C) 30 days
30 நாட்கள்

(D) 15 days
15 நாட்கள்

64. Security deposit taken from successful tenders subject to condition that amount of deposit not exceeds ________ percent of value of orders placed.
ஒப்பந்த நிறைவேற்றுகைக்கு பொறுப்புறுதியாக வெற்றிபெற்ற ஒப்பந்தப்புள்ளிக்காரரிடமிருந்து ஓர் பிணைய வைப்பீடு வழங்கு உத்தரவின் மதிப்பில் __________ விழுக்காட்டிற்கு மேற்படாத வைப்பீட்டுத் தொகை வேண்டுறுத்தல் வேண்டும்.

(A) 1
(B) 5
(C) 10
(D) 2

65. The minimum period of submission for tenders upto rupees two crores in value shall hold ________ days.
ரூபாய் 2 கோடி வரையிலான மதிப்பிலான ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தலுக்கான குறைந்தபட்ச காலம் __________ நாட்கள்

(A) 15
(B) 25
(C) 10
(D) 30

66. The minimum period of submission for tenders in excess of rupees two crores in value shall hold ________ days.
ரூபாய் 2 கோடிக்கும் மேற்பட்ட மதிப்பிலான ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிப்பதற்கான குறைந்தபட்ச காலம் ____________ நாட்கள்.

(A) 25
(B) 30
(C) 90
(D) 15

67. ___________ report can be considered by the tender accepting authority before taking final decision on tender.
____________ அறிக்கையினை ஒப்பந்த புள்ளியின் மீது இறுதி முடிவு எடுப்பதற்கு முன்னர் ஒப்பந்தப்புள்ளி ஏற்பு அதிகாரியினால் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்.

(A) Evaluation
மதிப்பாய்வு
(B) Monitoring
கண்காணிப்பு
(C) Supervision
மேற்பார்வை
(D) Scrutinization
ஆய்வு

68. The tender accepting authority place orders on tender quality the lowest evaluated price for not less than _________ percent of quantity covered in tender at price quoted by him.
ஒப்பந்தப்புள்ளி வரவேற்பு அதிகாரி மிகக்குறைந்த மதிப்பாய்வு விலை குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளியாளரிடம் அவர் குறிப்பிட்ட விலைக்கு ஒப்பந்தப்புள்ளியின் அடங்கியுள்ள அளவில் ____________ விழுக்காடு குறையாமல் வழங்கல் உத்தரவு பிறப்பிக்கலாம்.

(A) 75
(B) 50
(C) 60
(D) 30

69. Low value procurement means any procurement which is less than rupees _______ in value for construction.
குறைந்த மதிப்பு கொள்முதல் எனில் ரூபாய் ____________ மதிப்பிற்கு குறைவான, கட்டுமானத்திற்கான கொள்முதல் எனப்படும்.

(A) 50 lakhs
50 இலட்சம்
(B) 1 lakh
1 இலட்சம்
(C) 10 lakhs
10 இலட்சம்
(D) 25 lakhs
25 இலட்சம்

70. All eligible supplier who accept the fixed rate shall be enlisted by the ________ for delivery of services.
நிர்ணயிக்கப்பட்ட விலையினை ஏற்றுக் கொண்ட அனைத்து தகுதிபெற்ற வழங்குநர்கள் ____________ அமைப்பினால் ஒப்படை சேவை பட்டியலில் வைக்கப்படுதல் வேண்டும்.

(A) Procuring Entity
கொள்முதல் செய் அமைப்பு

(B) Tender Accepting Authority
ஒப்பந்தப்புள்ளி வரவேற்பு அதிகார அமைப்பு

(C) Tender Bulletin Officer
ஒப்பந்தப்புள்ளி செய்திமலர் அமைப்பு

(D) Tender Scrutiny Committee
ஒப்பந்தப்புள்ளி முடிவுகளை நிர்ணயிக்கும் அமைப்பு

71. When the successful tenderer feels to execute necessary agreements as prescribed within a period specified, then his ________ shall be forfeited.
அவசியமான உடன்படிக்கைகளை வெற்றிபெற்ற ஒப்பந்தப்புள்ளியாளர் நிறைவேற்ற தவறுகிற நேர்வில் அவரது மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஏற்புத் தன்மை இல்லாதது என முடிவு செய்யப்பட்டு தண்ட இழப்பாகுதல் வேண்டும்.

(A) Tender Notice
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியீடு

(B) Earnest Money Deposit
அச்சாரப் பண வைப்பீடு

(C) Evaluation Report
மதிப்பாய்வு அறிக்கை

(D) Quoted Price
சுட்டப்பட்ட விலை

72. Which rule describes the pre-qualification procedure in a single stage, two cover system?
எந்த விதி ஒற்றை நிலை, இரு உறை அமைப்பில் முன் தகுதி நடைமுறை பற்றி எடுத்துரைக்கின்றது?

(A) 20
(B) 31
(C) 32A
(D) 32

73. For purpose of clause (d) of section ________ of Act, 'low value procurement' means any procurement which is less than 10 lakhs is value for all other categories (except less than 25 lakhs for construction and less than 20 lakhs for vehicles) of procurement inclusive of consultancies for construction.
சட்டத்தின் பிரிவு ____________ கூறு (d) யின் நோக்கங்களுக்காக "குறைந்த மதிப்பு கொள்முதல்" எனில் கொள்முதல் வகைகளில் (ரூபாய் 25 லட்சத்திற்கு மதிப்பு குறைவான கட்டுமான கொள்முதல் மற்றும் ரூபாய் 20 லட்சத்திற்கு குறைவான வாகனங்களுக்கான கொள்முதல் தவிர) கட்டுமானத்திற்கான கலந்தாலோசனை உள்ளிட்டு ரூபாய் 10 இலட்சத்திற்கு மதிப்பு குறைவானது என பொருள்படும்.

(A) 14
(B) 15
(C) 16
(D) 18

74. In case of discrepancy between the prices quoted in words and in figures, the ________ shall be considered.
சுட்டப்பட்ட விலைகளில் எழுத்தில் மற்றும் எண்வில் முரண்பாடு இருக்கும் நேர்வில் ____________ பரிசீலிக்கப்படுதல் வேண்டும்.

(A) Average of two
இரண்டின் சராசரி
(B) Higher of two
இரண்டில் மிக அதிகமானது
(C) Lower of two
இரண்டில் மிகக் குறைந்தது
(D) Summation of two
இரண்டினுடைய கூட்டுத்தொகை

75. Tender can ask for clarification to the tender documents before ________ hours of opening of tender.
ஒப்பந்தப்புள்ளி திறப்புக்கு ____________ மணி நேரங்களுக்கு முன்னர் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மீது தெளிவு உரையினை ஒப்பந்தப்புள்ளியாளர் கேட்கலாம்.

(A) 24
(B) 12
(C) 48
(D) 36

76. Percentage of payment to be withheld for the effective performance of the contract, provided that withheld amounts do not exceed ________ percent of the total value of contract.
ஒப்பந்தத்தின் திறம்பட நிறைவேற்றுகைக்கு நிறுத்தி வைக்கப்பட வேண்டிய பணம் செலுத்துகை விழுக்காடானது மொத்த ஒப்பந்த தொகை மதிப்பில் ____________ விழுக்காட்டிற்கு மேற்படலாகாது.

(A) 25
(B) 50
(C) 10
(D) 5

77. Subject to provisions of rule 10, notices inviting tenders and decision on tenders in all cases where the value of the procurement ________ shall be published in the District Tender Bulletin.
விதி பத்தின் வகையங்களுக்கு உட்பட்டு ஒப்பந்தப்புள்ளியின் மதிப்பு ________ இருக்கிறவிடத்து அந்த ஒப்பந்த புள்ளியின் வரவேற்கும் அறிவிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி மீதான முடிவுகள் அனைத்து நேர்வுகளிலும் மாவட்டத்திலுள்ள ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் வெளியிடுதல் வேண்டும்.

(A) Exceeds rupees ten lakhs or below rupees twenty lakhs
10 இலட்சம் ரூபாய்க்கு மேலும் 20 இலட்சம் ரூபாய்க்கு உட்பட்டும்

(B) Exceeds rupees five lakhs or below rupees twenty five lakhs
5 இலட்சம் ரூபாய்க்கு மேலும் 25 இலட்சம் ரூபாய்க்கு உட்பட்டும்

(C) Exceeds rupees twenty lakhs or below fifty lakhs
20 இலட்சம் ரூபாய்க்கு மேலும் 50 இலட்சம் ரூபாய்க்கு உட்பட்டும்

(D) Exceeds rupees ten lakhs or below twenty five lakhs
10 இலட்சம் ரூபாய்க்கு மேலும் 25 இலட்சம் ரூபாய்க்கு உட்பட்டும்

78. The tender documents shall include price adjustment close to reflect any changes in major components based on a prescribed formula in case of large contracts where period of execution is likely to exceed.
பெரும் ஒப்பந்தங்கள் நேர்வில் நிறைவேற்றுகை காலம் ________ திங்களுக்கு மேற்பட்டதாக இருக்கிறவிடத்து வகுத்தமைக்கப்பட்ட வகைமுறைமை அடிப்படையில் முதன்மை செலவின் ஆக்கக் கூறுகளின் மாற்றங்கள் ஏதேனும் காண்பிக்கும் விலை சரிக்கட்டல் வாசகம் ஒன்றினை ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் உள்ளிட்டு கொண்டிருத்தல் வேண்டும்.

(A) 6 months
6 மாதங்கள்

(B) 1 year
1 வருடம்

(C) 18 months
18 மாதங்கள்

(D) 3 months
3 மாதங்கள்

79. The tender accepting authority shall be ordinarily permitted to vary the quantity finally ordered only to the extent of ________ percent, either way of requirement indicated in tender documents.
ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள அளவினை தேவைப்பாட்டின் ________ விழுக்காடு அளவிற்கு இருவழியிலும் இறுதி வழங்கல் உத்தரவில் சாதாரணமாக மாற்றிட ஒப்பந்தப்புள்ளி ஏற்கும் அதிகாரி அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(A) 10

(B) 50

(C) 25

(D) 5

80. Opening of tenders and procedure to be followed at tender opening discussed in rules _________ respectively.
ஒப்பந்தப்புள்ளிகள் திறப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி திறப்பின் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் விதிகள் ___________ முறையே விளக்கப்பட்டுள்ளன.

(A) 21, 22
(B) 20, 21
(C) 19, 20
(D) 22, 23

81. Punishment for false information explained in Section _________.
பொய் தகவலுக்கு தண்டனை எந்தப் பிரிவில் விளக்கப்பட்டுள்ளது?

(A) 60
(B) 63
(C) 62
(D) 61

82. Punishment for obstructing or impersonaly a food safety officer.
உணவு பாதுகாப்பு அதிகாரியை தடுத்தல் அல்லது ஆள்மாறாட்டம் செய்தலுக்குத் தண்டனை

(A) Imprisonment 3 months, 1 lakh rupees
மூன்று மாதங்கள் சிறை தண்டனை மற்றும் ஒரு இலட்சம் ரூபாய் அபராதம்

(B) Imprisonment 1 month, 500 rupees
ஒரு மாதம் வரை சிறை தண்டனை மற்றும் ஐநூறு ரூபாய் அபராதம்

(C) Imprisonment 6 months, 5 lakh rupees
ஆறு மாதம் வரை சிறை தண்டனை மற்றும் ஐந்து இலட்சம் ரூபாய் அபராதம்

(D) Imprisonment 6 months, 2 lakh rupees
ஆறு மாதம் வரை சிறை தண்டனை மற்றும் இரண்டு இலட்சம் ரூபாய் அபராதம்

83. Punishment for carrying out a business without license is
உரிமம் இல்லாமல் தொழில் செய்ததற்கு தண்டனையானது

(A) Bailable Offence
பிணையில் விடக்கூடியது

(B) Non Bailable Offence
பிணையில் விடக்கூடாது

(C) Bailable and Non Cognizable
பிணையில் விடக்கூடியதும் கைது செய்யக் கூடாததும்

(D) Non Bailable Cognizable Offence
பிணையில் விடக் கூடாததும் கைது செய்யக் கூடியதும்

84. Section 64 subjects to
பிரிவு 64 எடுத்துரைக்கக் கூடியது

(A) Punishment for unsafe food
பாதுகாப்பற்ற உணவுக்கான தண்டனை

(B) Punishment for subsequent offences
தொடர்ந்து செய்யும் குற்றங்களுக்கான தண்டனை

(C) Punishment for interfeing with seized items
பறிமுதல் செய்யப்பட்ட இடையூறு செய்தலுக்கு தண்டனை

(D) Penalty for possessing adulterant
கலப்படப் பொருளை வைத்து இருத்தலுக்கு தண்டனை

85. Processing aid is any substance or material but not included apparatus or utensil which was clearly meant in section
உணவுத் தயாரிப்பு உதவிப் பொருள் என்பது ஏதாவது ஒரு பொருள் என்று பொருள்படும் அதில் தளவாடங்கள் அல்லது சாமான்கள் அல்லது உண்ணப்படாத உணவுக் கூறுகள் உள்ளவை அடங்காது என்பது எந்தப் பிரிவின் நோக்கம்.

(A) 19
(B) 91
(C) 94
(D) 21

86. Penalty for substandard food may extend to
தரமற்ற உணவுக்கான தண்டனைக்குரிய அபராதம்

(A) 1 lakh rupees
ஒரு இலட்சம் ரூபாய்

(B) 2 lakhs rupees
இரண்டு இலட்சம் ரூபாய்

(C) 5 lakhs rupees
ஐந்து இலட்சம் ரூபாய்

(D) 50,000 rupees
ஐம்பதாயிரம் ரூபாய்

87. All imports of Articles of food to be subject to section
இறக்குமதி செய்யப்படுகின்ற உணவுப் பொருள்கள் அனைத்தும் உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டத்திற்கு உட்பட்டதாகும் என எடுத்துரைக்கும் பிரிவு.

(A) 27
(B) 28
(C) 25
(D) 20

88. The Chief executive officer shall submit programmes of work, annual accounts every year to _________ for approval.
ஒவ்வொரு ஆண்டும் தலைமை செயல் அலுவலர் பணியின் நிகழ்ச்சி நிரல் மற்றும் ஆண்டு கணக்குகளை ___________ அங்கீதாரத்திற்காக சமர்ப்பித்தல் வேண்டும்.

(A) Commissioner
ஆணையர்

(B) Food Authority
உணவு அதிகார அமைப்பு

(C) Scientific Committee
அறிவியல் குழு

(D) Director
இயக்குநர்

89. The Food Authority shall by notification, establish a committee to be known as the
உணவு அதிராக அமைப்பு அறிவிக்கை செய்து ___________ ஏற்படுத்த வேண்டும்.

(A) Scientific Committee
அறிவியல் குழு

(B) Apellate Tribunal
மேல் முறையீட்டு தீர்ப்பாயம்

(C) Central Advisory Committee
மத்திய ஆலோசனை குழு

(D) Food Safety Committee
உணவு பாதுகாப்பு குழு

90. Powers of Food Safety Officer discussed under section
உணவு பாதுகாப்பு அதிகாரியின் அதிகாரங்கள் எந்தப் பிரிவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

(A) 41

(B) 38

(C) 30

(D) 35

91. Food Analyst shall inform Designated Officer giving reasons and specify the time to be taken for analysis, if the sample cannot be analysed within _______ days of it's receipt.
உணவு மாதிரியை பகுப்பாய்வு செய்ய முடியாது இருக்கும் போது அதை பெற்றதிலிருந்து எத்தனை நாட்களுக்குள் அதற்கான குறிப்பிட்டு அது எப்போது பகுப்பாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை குறிப்பிட்டு பதவிப் பெயர் குறிப்பிடப்பட்ட அதிகாரிக்கும் மற்ற உணவு பாதுகாப்பு ஆணையருக்கும் உணவு பகுப்பாய்வாளர் தெரிவித்தல் வேண்டும்.

(A) 18

(B) 14

(C) 21

(D) 30

92. Penalty for misbranding food may extend to ________.
தவறான குறியிடப்பட்ட உணவு விற்பனை செய்ததற்காக தண்டனைக்குரிய அபராதம்

(A) Two lakh rupees
இரண்டு இலட்சம் ரூபாய்

(B) Three lakh rupees
மூன்று இலட்சம் ரூபாய்

(C) One lakh rupees
ஒரு இலட்சம் ரூபாய்

(D) Five lakh rupees
ஐந்து இலட்சம் ரூபாய்

93. Prescribed means prescribed by rules made by
எந்த அரசின் இயற்றப்பட்ட விதியின் கீழ் குறித்துரைக்கப்பட்டது என்பது உணவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நேர்விற்கேற்ப குறித்துரைக்கப்பட்டது என்று பொருள்படும்.

(A) Only Central Government
மத்திய அரசு மட்டும்

(B) Only State Government
மாநில அரசு மட்டும்

(C) Central or State Government
மத்திய அரசு அல்லது மாநில அரசு

(D) Central and State Government
மத்திய அரசு மற்றும் மாநில அரசு

94. Penalty for sub-standard food Section 51 may extend to fine of ________.
தரமற்ற உணவு விற்பனை செய்ததற்காக நபரொருவர் பிரிவு 51-ன் கீழ் எத்தொகை வரையில் அபராதம் விதித்து தண்டிக்கப்படுவார்.

(A) 2 lakhs rupees
இரண்டு இலட்சம் ரூபாய்

(B) 1 lakh rupees
ஒரு இலட்சம் ரூபாய்

(C) 10 lakhs rupees
பத்து இலட்சம் ரூபாய்

(D) 5 lakhs rupees
ஐந்து இலட்சம் ரூபாய்

95. If a person distribution any adulterant which is injurious to health, it is liable to a penalty not exceeding
உடல் நலத்திற்கு தீங்கு ஏற்படுத்தியிருக்கும் கலப்படப் பொருளை ஒருவர் விற்பனை செய்தால் குற்றத்திற்கான தண்டனை எத்தொகைக்கு மேற்படாத அளவில் அபராதத் தொகையாக விதித்தல் வேண்டும்.

(A) Five lakh rupees
ஐந்து இலட்சம் ரூபாய்

(B) Three lakh rupees
மூன்று இலட்சம் ரூபாய்

(C) Ten lakh rupees
பத்து இலட்சம் ரூபாய்

(D) Two lakh rupees
இரண்டு இலட்சம் ரூபாய்

96. Within the meaning section ________ of IPC (45 of 1860) the member officer of food authority and commissioners of food safety. And Officers shall be deemed to be public servants.
உணவு அதிகார அமைப்பு உறுப்பினர்கள் உணவு பாதுகாப்பு ஆணையர்கள் அதிகாரிகள் உணவு பாதுகாப்பு சட்ட வகைகளின்படி செயற்படுகின்றபோது அவர்கள் இந்திய தண்டனை சட்டம் (45/1860) பிரிவு ________ ன் பொருளின்படி பொது ஊழியர்கள் ஆவர்.

(A) 21

(B) 18

(C) 17

(D) 25

97. Adjudication and food safely appellate tribunal subjects to chapter _______.
தீர்ப்பு மற்றும் உணவு பாதுகாப்பு மேல் முறையீட்டு தீர்ப்பாயம் பற்றி வரையறுக்கப்பட்ட அத்தியாயம்

(A) 10
(B) 8
(C) 12
(D) 9

98. In case of death an interim relief shall be paid to next of kin within _______ days of incident.
மரணம் ஏற்பட்டிருக்கும் பொழுது இறந்து போனவரின் நெருங்கிய உறவினருக்கு சம்பவம் நடந்ததிலிருந்து ___________ நாட்களுக்குள் இடைக்கால நிவாரணம் வழங்கப்படுதல் வேண்டும்.

(A) 90 days
90 நாட்கள்
(B) 60 days
60 நாட்கள்
(C) 30 days
30 நாட்கள்
(D) 15 days
15 நாட்கள்

99. The Chairperson of food authority shall not hold office after attainment of age ________ years.
உணவு அதிகார அமைப்புத் தலைவர் ___________ வயது நிறைவடைந்த பிறகு அப்பதவியில் இருத்தல் கூடாது.

(A) 58
(B) 60
(C) 65
(D) 62

100. Offences and penalties of FSS Act 2006 subjects to chapter
குற்றங்களும் தண்டனைகளும் (உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் 2006) வரையறுக்கப்பட்ட அதிகாரம்

(A) 9
(B) 6
(C) 10
(D) 11